IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | 69/2018 |
| | | D/W's | : | DW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ராம்குமார் | CASTE | : | |
| S/O | கிருஷ்ணராஜ் | RELIGION | : | இந்து |
| VILLAGE | பாலமேடு | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 31.10.2025**

**குறுக்கு விசாரணை**

1. வழக்கின் இருதரப்பினரையும் எனக்குத்தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்குத் தெரியும் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை அகற்றக்கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் சர்வே எண் 849/39, மற்றும் 849/40 பிரதிவாதியின் சர்வே எண் 849/41, 849/40A. வழக்கின் இருதரப்பினர்களின் சர்வே எண்களும் வெவ்வேறானவை. இரு தரப்பினர்களின் சொத்திற்கும் இடையே வேறு சொத்துக்கள் இல்லை. வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது நான் அங்கு இல்லை.

2. நான் பிரதிவாதிக்கு வழக்குச்சொத்தை விற்பனை செய்தபோது அளவீடு செய்துதான் கொடுத்தேன். நான் அளவீடு செய்து விற்பனை செய்ததாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. பிரதிவாதியின் சொத்திற்கு வடக்குப்புரம் வாதி சொத்து அமைந்துள்ளது. வாதி, பிரதிவாதி சொத்துக்கு கிழக்குப்பக்கம் ரோடு உள்ளது. வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் மேற்படி எல்லைகள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் விற்பனை செய்தபோது சொத்தின் அளவீடுகள் பட்டா மற்றும் பத்திரத்தில் ஒரே மாதிரி இருந்தது.

3. நான் கிரையம் கொடுத்தபின் பிரதிவாதிகள் எனது வீட்டை இடித்துவிட்டு புதிதாக வீடு கட்டினார்கள் என்றால் சரிதான், பழைய அஸ்திவாரத்தில்தான் வீடு கட்டினார்கள். வாதியின் இடத்தை நான் கிரையம் கொடுக்கவில்லை. வாதி அவர்களது சொத்தை எப்போது யாரிடம் கிரையம் வாங்கினார் என்று எனக்குத்தெரியாது. வாதி வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே 2 அடி

சந்து உள்ளது. மேற்படி 2 அடி சந்தை நான் அஸ்திவாரம் போட்ட காலத்தில் சந்தை விட்டுவிட்டு வீடு கட்டினேன்.

4. நான் வழக்கை பற்றி தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வீட்டின் நீள அகலம் எனக்குத்தெரியாது. வாதியின் வீட்டிற்கு அடுத்து 5 அடி இடம் வாதிக்கு சொந்தமானது என்றாலும் அதில் பிரதிவாதி 3 அடி அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. மேற்படி 2 அடி சந்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் 849/41 ல் அமைந்துள்ளது. பிரதிவாதி வீடு கட்டுவதற்கு எத்தனை சதுரடியில் வீடு கட்ட அனுமதி பெற்றார் என்றால் 920 சதுரடி.

5. நான் விற்பனை செய்தபோது பிரதிவாதி சொத்தில் காம்பவுண்ட் சுவர் இல்லை. காம்பவுண்ட் சுவர் இருப்பதாக சொன்னால் அது தவறு. 2 அடி சந்து இருப்பதாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டிய இடத்தில் ஏற்கெனவே நான் கட்டிய அஸ்திவாரமும் முத்தம்மாள் கட்டிய அஸ்திவாரமும் இருந்தன. எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் போட்டிருந்த அஸ்திவாரத்தில் பிரதிவாதி வீடு கட்டியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. நான் கிரையம் கொடுத்ததலிருந்து தற்போது வரை பிரதிவாதிகளின் சொத்தின் அளவுப்படி எந்தவித மாற்றமும் இல்லை. வாதியின் சொத்து காலியிடமாக உள்ளது என்றால் அஸ்திவாரம் மட்டும் போட்டுள்ளது. வழக்குச்சொத்தின் விவரங்கள் பற்றி எனக்குத்தெரியாமல் பிரதிவாதி கேட்டுக்கொண்டுள்ளதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy //
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.